www.tamilarangam.net

# செய்திக்கோவை

T.I.B.

கார்த்திகை –1987.

குரல் 31




புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எண்ணம்

தமிழினத்திற்கு கிடைக்கவிருந்த அமைதிக்கான கடைசி சந்தர்ப்பமும் தவறவிடப்பட்டுவிட்டது. இந்தியப் பேரரசை ஓட ஓட விரட்டுவோம் என்று கூறுரைத்த ஆயுத வெறிபிடித்த குழுவினர் இன்று காடுகளில் மறைந்து விட்டனர். ஆனால் அப்பாவிப் பொது மக்களின் உயிரும் உடமைகளும் அநியாயமாக சூறையாடப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், இம்மாத முற்பகுதியில் வெளியான ஒரு செய்தி, 'செஞ்சிலுவைச் சங்கத்தினர் விநியோகித்த உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு-கியூவரிசையில் நின்ற பொது மக்கள் மீது, தாக்குதல் நடாத்தியதில், 8-அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர்'

தமிழீழத்திற்காகப் போராடுகிறோம் என்ற போர்வையில், தமது ஆதிக்க வெறியை நிலைநாட்ட, ஆயுதமேந்திய அரசியலறிவற்ற ஒரு பயங்கரவாதக் குழு எடுத்த கடைசி முயற்சிகளில் ஒன்று தான் சாவகச்சேரியில் நடந்த இக் கோரச் சம்பவம்.

தமிழீழப் போராட்டத்திற்கெதிராக இந்த மக்கள் விட்ட பிழை தான் என்ன? பரிதாபகரமாக கொல்லப்பட்டதற்குக் காரணம் என்ன?

இறுதி வரை தமது மண்ணிலேயே வாழவேண்டும், மண்ணை விட்டு ஓடாமல் இறுதி வரை இருந்தது குற்றமா? பெரியவர்கள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டாலும், தமது குழந்தைகளின் பட்டினியைப் பொறுக்க முடியாத அந்த வேதனையில், உணவு வாங்கச் சென்றது தவறா?

பட்டினிச் சாவிலிருந்து தப்பியவர்கள், ஆயுத வெறியர்களிடமிருந்து தப்ப முடியவில்லை. இன்னுமா நாம் சிந்திக்க மறுக்கிறோம்.

செஞ்சிலுவைச் சங்கத்திடம் உணவு வாங்கிய அந்த மக்கள் தமிழீழ உருவாக்கத்தை எதிர்க்கவில்லை. நிட்சயமாக இல்லை. அங்கு நடக்கும் போராட்ட முறையைத் தான் எதிர்க்கத் தொடங்கியுள்ளார்கள். அங்கு நடாத்தப்பட்ட கோமாளித்தனமான, புத்தி சாதுரியமற்ற கண்ணிவெடிப் போராட்ட முறைகளால் தமிழீழத்தை, தமிழீழ அபிலாசைகளை அழிக்க முடியுமே தவிர, எவ்விதத்திலும் அதைப் பெற்றுக் கொள்ள முடியாதென்பதை உணரத்தலைப்பட்டு விட்டனர். இன்று அங்கிருந்து வரும் செய்திகள் கடிதங்கள் இதற்குச் சாட்சி.

தற்போதைய சூழ்நிலையில், எமது மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது, புனர்வாழ்வு, குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி, கல்வி மற்றும்



--புனரமைப்புகளேயாகும். இந்திய, ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினாலும், தந்திரோபாயமற்ற போராட்ட வழிமுறைகளாலும் இடம்பெயர்ந்த மக்களது, அழிக்கப்பட்டுவிட்ட பொருளாதாரம், திட்டமிடப்பட்டு கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்காக இன்று கிடைத்திருக்கும் வாய்ப்புகள் அனைத்தையும் சரிவரப் பயன் படுத்த வேண்டும். இதுவே யதார்த்தமானதும் திட்டமிட்ட அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு ஊன்று கோல்களுமாகும்.

இந்த வகையில் இன்று, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வு நிதியம் ஆரம்பித்து வரும் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு, அப்பகுதி மக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பெரும் ஆதரவு, உண்மையான அபிலாசைகளை தெட்டத் தெளிவாக-எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகிறார்கள் என்ற வீணே வாய்ச்சவாடல் விடுவதும், அவர்கள் மீது, பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு, மூன்றாவது சக்தியை ஆக்கிரமிப்புச் செய்ய வைக்கும் பயனற்ற முரட்டு வாதம் புரிவதை விடுத்து, அப்பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீண்டும் குடியமர்த்துவதுடன், மேலும் தமிழ்க் குடியேற்றங்களை ஊக்குவித்து, நிரந்தரமான முறையில் பரிகாரங்கள் தேடப்படல் வேண்டும்.

எமது மண்ணில், துப்பாக்கி முனைகளில் வைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு ஆதரவாக எழுதி, ஏனைய மக்கள் இயக்கங்களை தாறுமாறாக எழுதி வந்த பத்திரிகைப் பேனாக்கள், இன்று உண்மை நிலையைக் கக்க ஆரம்பித்திருக்கின்றன. இதுவரை காலமும் தாம் எப்படியெல்லாம் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்து, இன்று குமுறத் தொடங்கி விட்டனர். பொது மக்கள் மத்தியிலும் ஆயுத பயமின்றி சுதந்திரமாக-சிந்திக்கவும், கருத்துக்களைப் பரிமாறவும் நிலையேற்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்திலும் மீளவும் நிலைமைகள் வழமைக்குத் திரும்ப ஆரம்பித்திருக்கிறது. இதே போல ஏனைய பகுதிகளிலும், வழமை நிலை திரும்பி, அங்குள்ள மக்களனைவர்க்கும் இனியாகிலும் ஒரு இன்னலற்ற மறுவாழ்வு கிடைத்து சுயநிர்ணயம் பெற்ற மக்களாட்சியில் எழுச்சி பெற்று வாழ, எம்மாலான முழு முயற்சிகளிலும் ஈடுபடுவோம்.

யதார்த்த பூர்வமான அணுகு முறைகளின் மூலம், படிப்படியான திட்டமிட்ட நடவடிக்கைகளினூடாக, பரந்து பட்ட மக்களின் ஒன்று திரண்ட ஒத்துழைப்புடன், அன்னிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும், அந்த நிலை அடைய, இன்றே கரமிணைப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ?..!..?..!..?..!.....

மண் சிவந்து,
பின் வானமும் சிவந்தாயிற்று.
பின்பும்
எங்கோ விடிவெள்ளி எரிக்கப்பட்டு விட்டதைப்போல
நினைவில் இன்னும் இருட்டு?

புயல்களின் போக்கிற்கு
முகில்கள் முகங்கொடுக்க முடியாமல்
கலைந்து போயாயிற்று.
இருந்தும்—
மலைகளின் பின்னே,
புயல்கள் புகமுடியாத திசைகளில்
மறைந்திருப்பதால், மனதில் இடிவிழுகிறது.

இரவின் ஈரம் துடைக்கப்பட்டுவிட்டதாக
மெல்லிய நீலப்பனியில் நனைந்தபடி
காலை மலர்ந்திருக்கிறது.
நேற்றுப்பார்த்த துப்பாக்கிகளையும்
அதைப் பற்றியிருந்த சீருடைகளையும்
அதன் கீழ் மறைந்திருந்த அரக்கத்தனங்களையும்
அதனால் உறைந்த குருதியையும்
இந்த மனதில் பிடித்த ஈரத்தையும்
நினைவில் இருந்து எப்படி நீக்க?

மண்ணுடன் ஸ்பரிசித்த குருதியின் ஈரத்தில்
முளைத்து வளர்ந்த செடிகளின் முளையிலும்
கேள்விக்குறிகளே பூத்திருக்கின்றன.

முற்றுப்புள்ளியில்
இங்கு எதுவுமே முடிக்கப்படவில்லை என்பதால்
எல்லாம் கேள்விக்குறிகளில் நிற்கின்றன.

இடிக்கப்பட்ட சுவர்கள்
மீண்டும் உயர நினைக்கின்றன,
இன்னும் வெடிமருந்துகள் இருப்பதால்
அவைகளும் நிலைகுழம்பி இருக்கின்றன.



கிழக்கைக் கிழித்துக்கொண்டு வர
சூரியனுக்கும் சின்ன ஆசை,
துப்பாக்கிகள் இன்னும் பாதுகாக்கப்படவில்லை
அதனால், கணக்கப் தொலைந்திருக்கிறான்.

தூறல் நின்று போச்சு,
துப்பாக்கிகள் ஓய்ந்து போச்சு என்று
முடிவு செய்ய எவராலும் முடியாது.
மார்கழி அல்லவா,
மயிர் நனையாத துளிகள் விழலாம்....

சொன்ன விலையில் இருந்து—இன்று
நியாய விலைக்கு விற்கும்
நிலைமை வந்ததையிட்டு
சிலர் கவலை அடைந்திருக்கிறார்கள்.
அவர்களுக்காகவாவது
சில துப்பாக்கிகள் வேதனைப்படும்,
அதனாலும் நாடு சோதனைப்படலாம்.

உச்சியில் சுழலும் புயலை
உள்ளங்கைக்குள் பிடித்து அடைக்கத்தான்
உள்ளங்கள் துடிக்கின்றன,
இருந்தாலும்....
இருப்பின் உறுதிக்காகவே இன்னும் காத்திருக்கின்றன.

இறந்தகாலத்தை நினைத்தால்
இமைகள் ஈரமாகிவிடுகின்றன.

நிகழ்காலம் கூட
இங்கே நிலையாக இல்லை,
இருந்தாலும்....
எதிர்காலத்தை நிர்ணயிக்காமல்
கனவுகளில் வாழ காலம் சம்மதிக்காது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இப்படியும் சொன்னார்கள்



குற்றம் குற்றமே!

இன்று வரை புலிகள் குழுவினர், தமது தவறுகளை உணர்ந்து கொண்டதாகவோ, அல்லது திருத்திக் கொண்டதாகவோ இல்லை. இருப்பினும் அவர்களுக்கெதிரான இந்தியப் படைகளின் தாக்குதல்களை நாம் ஒரு போதும் ஆதரிக்க முடியாது.

—தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் உமாமகேஸ்வரன்.

பெரிய குண்டு!

புலிகள் இயக்கத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஏராளமான வெடி குண்டுகள், பாக்கிஸ்தானில் தயாரிக்கப்பட்டவையாகும்.

—இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. சிவராஜ் பட்டீல்.

நம்ப முடியாத ஆனால் உண்மை!

ஜே வி பி யினர்க்கும், சுதந்திரக் கட்சியினர்க்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

—பிரதி பாதுகாப்பு அமைச்சர் அதுரா பந்தியன்.

அடுத்த பிடி அணைப்பு!

பூசாவில் இருந்து விடுதலையான ஒருவருக்கு 25,000 ரூபா வரையில் நஷ்டஈடு வழங்க நாம் முடிவு செய்துள்ளோம்.

—மட்டக்களப்பு அரச அதிபர் திரு. செல்வரட்ணம்.

உருப்படியான செயல்!

இன்று நாடெங்கும் 5 இலட்சம் தமிழ் அகதிகள் உள்ளனர். இது ஒரு சர்வ-தேசப்பிரச்சனையாகிவிட்டது. அவர்களை மீண்டும் குடியமர்த்தும் வேலைகளில் அரசு ஈடுபட வேண்டும்.

—பாராளுமன்றத்தில் தினேஷ் குணவர்த்தன.

தப்புக் கணக்கு!

தமிழரது உரிமைகளைப் பறித்த அரசாங்கமே இன்று அதை வழங்கியுள்ளது.

—அமைச்சர் தொண்டமான்.

எங்கேயோ கேட்ட குரல்!

குடியாட்சியில் நம்பிக்கையில்லாத புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காமல்,—வன்முறையைத் தொடருவது, அனைத்து தமிழ் மக்களுக்கும் இழப்பாகும்.

—இந்திய அமைச்சர் ப. சிதம்பரம்.

மீண்டும் தயாரிப்பு வேலை!

எமது படையினர் தற்போது வட/கிழக்கில் நடவடிக்கைகளில் ஈடுபடாத — போதும், அவர்களுக்கு தீவிர பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர்

## திரு. உமாமகேசுவரன் (முகுந்தன்)

## இன்றைய சூழலில் என்ன கருதுகிறார்?

இன்று இலங்கைத் தமிழர்களுக்கு நடக்கும் இன்னல்களை ஓர் அளவு தாங்கள் வானொலி மூலமும், செய்தித்தாள் மூலமும் அறிந்து கொண்டிருப்பீர்கள் என எண்ணுகின்றேன். இன்று இந்திய அரசு விடுதலைப் புலிகள் மேல் தொடுத்திருக்கும் தாக்குதல், இலங்கைப் போர்ப்படை கடந்த காலத்தில் தாக்கியதை விட மிகக் கொடுமையானதாகும். மிகப் பெருமளவிலான தகரி(பீரங்கி)கள், 155 எம். எம். தகரி(பீரங்கி)கள், 120 எம். எம். 'மோர்ட்டார்கள்' (MORTORS) கனவகை இயந்திரத் துமுக்கிகள், இறகூர்தித் (Helicopter) தாக்குதல்கள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளது. இத்தாக்குதலில் புலிகள் படையினரை விட பொதுமக்களும், வீடுகளும், பொதுச் சொத்துகளுமே கூடுதலாக அழிக்கப்பட்டு வருகின்றன. ஒப்புரவு (சமாதானம்) என்ற போர்வையில் இலங்கை படிப் படியாகக் கவரப்(ஆக்கிரமிக்கப்)படுகின்றது. இந்திய அரசு தன்னை ஞாயப் படுத்திக் கொள்வதற்குக் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் விடுதலைப் புலிகள் விட்டுக் கொண்டிருக்கின்ற பாரிய இன அழிவுக் (பாசிசக்) கொள்கையின் தன்மைகளேயாகும். புலிகள் கடந்த காலத்தில் அனைத்து இயக்கங்களையும் கொலை செய்ததனையும், ஏதுமறியாச் சிங்கள மக்களைக் காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்ததனையும் தற்போதைய தாக்குதலுக்கு அடித் துணையாக இந்திய அரசு பயன்படுத்திக் கொள்கின்றது.

விடுதலைப் புலிகள் தவறான போராட்டங்கள், ஐநூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுப் போராளிகளையும் அதன் தலைமைகளையும் அழித்தமை, மக்களை மிரட்டி வரி என்ற போர்வையில் கொள்ளையடித்தமை, ஆயிரக்கணக்கில் ஒன்றுமறியாச் சிங்கள மக்களைக் கொலை செய்தமை, இந்திய அரசின்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதவியுடன் முடி சூட்டிக் கொள்ள ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு இடைக்கால ஆட்சிக்குத் தமது போர்ச் செல்வர்களை (War Lords) அமைத்தமை ஆகிய அரசியல் தெளிவற்ற நடவடிக்கைகளே இன்றைய நிலைக்குக் காரணமாகும். விடுதலைப் புலிகள் இன்றும் இவற்றை உணர்ந்து கொண்டதாகவும், திருத்திக் கொண்டதாகவும் இல்லை. இருப்பினும் இந்தியப் படையினரின் தாக்குதல்களை நாம் ஆதரிக்க முடியாது. இந்தியப் படையினர்

புலிகளின்மேல் நடத்தும் இத் தாக்குதல்கள் மக்கள் நாயக ஆற்றல்களையும், தேசப்பற்றுள்ள ஆற்றல்களையும், தமிழ்ப் போராளிகள் அனைவரையும் காலப்போக்கில் அழிப்பதற்கான ஒரு செய்முறைத் தாக்குதலாகவே நாம் பார்க்கின்றோம்.

எனவே இந்தியப் படையின் இத் தாக்குதல்களை (புலிகளின்மேல்) உடனடியாக நிறுத்த வேண்டும் என அறை கூவல் விடுகின்றோம்.

வறிய நாடுகளின் மேலும், விடுதலை இயக்கங்களின்மேலும் வன்கவர்புகளை மேலாளுமை நாடுகள் செய்யும் பொழுது குரல் தொடுக்கும் உ. த. மு. க, தி. மு. க, மற்றும் இடது சாரிகளும் இன்று வாய் மூடி நிற்பது எமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. தென் ஆப்பிரிக்கா, நமீபியா, பாலத்தீனம், குவாத்தமாலா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின்மேல் வன்கவர்தல் செய்யும் வல்லரசியங்களையும், சியோனிசக் கொள்கையாளர்களையும் எதிர்த்துக் கண்டனமும், ஊர்வலமும் நடத்தும் இந்திய இடதுசாரிகளும், குடியரசுவாதிகளும் இலங்கையின் மேல் இந்தியா நடாத்தியுள்ள வன்கவர்ப்பை (ஆக்கிரமிப்பை)க் கண்டிக்காமல் இருக்கின்றனர்.

இந்தியா தன் நலன்களைக் காப்பாற்றும் நோக்கில் இலங்கையில் படைகளைக் குவித்துள்ளது. **எனவே இந்தியாவின் நலன் இந்தியர்களின் நலன் என உ.த.மு.க.வும், தி. மு. க. வும் இருக்கின்றனவா?**



ஈழமுரசு 10.11.87.

**இலங்கை மக்களின் உழைப்பைச் சுரண்டி இந்திய மக்களை இந்திய அரசு வாழ வைக்கும் என இந்தியர்கள் கருதுவார்களேயானால் அக்கருத்துத் தவறானதாகும்.** மாறாக இலங்கையில் இந்தியப் படையின் இணைப்புகளையும், படைத் தளவாடச் சேதங்களையும் ஈடுகட்ட, இந்நியமக்களே இந்தியஅரசினால் சுரண்டப்பட்டுப் பொருளியல் நசுக்கலுக்குட்படுத்தப் படுவார்கள்.

என்வே தாங்கள் இந்தியப் படையின் நடவடிக்கைகளுக் கெதிராக (புலிகளின் மேல் எடுக்கும்) குரல் கொடுப்பதுடன், கலைஞரையும் தாங்கள் நேரில் சந்தித்து நிலைமையை விளக்கி இந்தியப் படைத்துறை நடவடிக்கைகளைக் கட்டுதிட்டங்கள் இன்றி நிறுத்துதற்குப் போராட்டம் நடாத்துமாறு கேட்டுக் கொள்ளவும்.

மன்னார்.　　இவ்வண்ணம், தாங்கள் அன்புள்ள

13-10-1987.　　க. முகுந்தன்

போராளிகள்-மனிதாபிமான சிந்தனையுடன்

# இந்திய நல்லெண்ணத்துடன் ஒத்துழைக்க வேண்டும்

யாழ். குடாநாட்டு மக்கள் ஒருமனதாக கோரிக்கை

வீரகேசரி. 01.12.87.

தென்மராட்சி,

யாழ் குடா நாட்டு தமிழ் மக்களின் நலன் கருதி போராளிகள் ஜீவகாருண்யம், மனிதாபிமான சிந்தனையுடன் பாரதத்தின் நல்லெண்ணத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்று யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனர். தாம் பாடுபட்டுக் கட்டி எழுப்பிய வீடுகளில் வசிக்க இயலாமல் அலைகின்றனர். உணவு கிடைக்காமல் பட்டினிச் சாவை மேற்கொள்கின்றனர்.

இந்தியப்பாட்டை கருத்தில் எடுத்துச் சிந்தனை செய்து மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறுவதற்கு இதில் பூரண அக்கறை காட்ட வேண்டும் என்று யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

www.tamilarangam.net






__ஆறு வருடம் சிறை!__

இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தியை, பிரியா விடை அணிவகுப்பின் போது தாக்கிய ஸ்ரீலங்கா கடற்படை வீரர் ரோகணவுக்கு, இராணுவ நீதி மன்றம் ஆறு வருட கடும் காவல் தண்டனை வழங்கியுள்ளது.

__மீண்டும் கடிதம்!__

ஐ.நா.காரியதரிசிக்கு புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் இரண்டாவது கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இந்திய அரசின் தமக்கெதிரான தாக்குதல்களை நிறுத்தக் கோரியும், பேச்சு வார்த்தை நடாத்த வற்புறுத்துமாறும் அவர் அக் கடித மூலம் கேட்டுள்ளார்.

__மாகாணசபைத் தேர்தல்கள்!__

இலங்கையில் மாகாண சபைக்கான தேர்தல்கள் வருகிற மார்ச் மாதம் நடைபெறலாமென நம்பப்படுகிறது. இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. தேர்தல் நடத்தக்கூடிய மாகாணங்களிலேயே முதலில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும்.

__பச்சைப் புலி!__

இலங்கை தென்மாகாணத்தில் 'பச்சைப் புலி' எனும் பெயரில் புதிய இயக்கம் ஒன்று தோன்றியுள்ளது. இந்த இயக்கம் ஜே வி பி யினர்க்கு எதிராகவும், சமாதான உடன்படிக்கைக்கு ஆதரவாகவும் செயற்படுகிறதாம்.

__பரிகாரம்!__

தமிழ்ப் பகுதிகளுக்கு, இதுவரை 5400 தொன் இந்திய உணவுப் பொருட்கள், இந்தியப் படையினராலும், செஞ்சிலுவைச் சங்கத்தினராலும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

__மறுவாழ்வு!__

இந்தியப் படைகளிடம் சரணடைந்துள்ள 5 புலிகள் குழு உறுப்பினர்களுக்கு, மறுவாழ்வு பணிகள், இந்தியப் படையினரால் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

__அகதிகளாக மக்கள்!__

நாடெங்கும் தற்போது, 86 அகதிகள் முகாம்கள் இருப்பதாகவும், இதில் 84 சத வீதமாக, ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களும், 6 சத வீதமாக 8 ஆயிரம் முஸ்லீம் குடும்பங்களும், 10 சத வீதமாக 14 ஆயிரம் சிங்கள குடும்பங்களும் அகதிகளாக இருப்பதாக புனர்வாழ்வு அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



__தமிழ்ழ மக்கள் விடுதலைக் கழக வவுனியா-முல்லைத்தீவு பிராந்தியப் பொறுப்பாளர் தோழர் மாணிக்க தாஸன் அண்மையில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் சுருக்கம்.__

# எமது கணிப்பும், பணியும்.

தமிழ்ப் பிரதேசங்களில், இந்தியப் படையினர்க்கும், புலிகள் குழுவினர்க்கும் இடையில் நடைபெற்று வரும், இராணுவ நடவடிக்கைகள் விரைவில் நிறுத்தப்பட்டு, இவ் வருட இறுதிக்குள் இருசாராரும் ஒரு உடன் பாட்டிற்கு வருவார்கள் என நாம் எதிர் பார்க்கின்றோம்.

இவர்களுக்கிடையிலான இராணுவ நடவடிக்கைகள் மேலும் மேலும் பொது மக்களுக்கு பாதிப்பை உண்டு பண்ணவே செய்யும் என எச்சரிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

புலிகள் குழுவினரின் தவறான போராட்ட அணுகு முறைகள் காரணமாகவே, எமது மக்களின் அரசியல் பிரச்சனைகள், தற்போது இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கைமாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பொது மக்கள் படு கொலைகள் போன்ற திட்டமிடப்படாத போராட்ட அணுகு முறைகள் அன்னிய தலையீட்டுக்கு வழி வகுக்குமெனவும், இவற்றின் மூலம் ஒரு இனத்தின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதென நாம் முன்பு பல முறை எச்சரித்திருக்கின்றோம்.

எமது மக்கள் பெருமளவில் பாதிப்புகளுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசத்திற்கான மறுவாழ்வும், அபிவிருத்தி வேலைத் திட்டங்களும், அதற்கான கட்டமைப்பும் உடனடியாக எமக்கு அவசியமாகிறது.

வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மக்களுக்கும் இது இன்று, இன்றி அமையாததாகியுள்ளது.

வட/கிழக்கு வாழ் அனைத்து மக்களதும் அரசியல், கலாச்சார, பொருளாதார விடுதலைக்காக தமிழ்ழ மக்கள் விடுதலைக் கழகம் தொடர்ந்து போராடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் ——*

### *—— அகதி முகாம்களில்...

வட/கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படைகளின் புலிகளைத் தேடி நடாத்தி வரும் முற்றுகைகள் காரணமாக 30,000 ற்கும் மேற்பட்ட முஸ்லீம் அகதிகளாக தமிழ்ப் பகுதிகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் குறிப்பாக வடக்கு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லீம் மக்கள் அநுராதபுரம், புத்தளம் மற்றும் அதைச்சூழ உள்ள பகுதிகளில் பாடசாலைக் கட்டிடங்களிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்

மேற்படி அகதிகள் முகாம்கள் பலவற்றிற்கு, இம்மாத முற்பகுதியில் விஜயமொன்றினை மேற்கொண்ட தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனத்தின் குழுவொன்று, அவர்களது தேவைகள் பிரச்சனைகள் பற்றி கலந்து பேசியுள்ளதோடு, அவர்களுக்கு நேர்ந்த துன்பங்கள் பாதிப்புகள் பற்றி தகவல் சேகரித்து திரும்பிய மேற்படி குழு அது தொடர்பான அறிக்கையொன்றை 18.11.87 அன்று கொழும்பில் வெளியிட்டுள்ளது.

புலிகள் குழுவினர் மீது முற்றுகைகளை நடாத்தவிருப்பதால், அவ்வேளை பொது மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதிருக்கும் வண்ணம் தங்கள் கிராமங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விடும்படி இந்தியப் படைகள் அறிவித்திருந்த போதும், அவ்விதம் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்த சில கிராமங்கள் தாக்கப்பட்டதாகவும், தாங்கள் வெள்ளைக் கொடிகள் சகிதம் பயணம் செய்த வாகனங்கள் சில கூட தாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

---

தமிழ் மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் இவ்வருட மார்கழி மாத முற்பகுதியில், கொழும்பு சென்ற சமயம்,
THE WEEK END- பத்திரிகைக்கு
அளித்த பேட்டியின் போது, தற்போதைய நிலைமைகள் குறித்து நிருபர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்ப காலத்தில் நண்பராக இருந்தவரும் புலிகள் இயக்கத்தை ஸ்தாபித்தவர்களில் ஒருவருமான வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்வதற்காக, 5 இந்திய ஹெலிகொப்டர்கள் தமிழ்ப்பிரதேசங்களில் வட்டமிட்டபடி இருப்பதாகவும், இதனால் மக்கள் மேலும் பதட்ட நிலையை அடைந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பேட்டியின் போது, கழக முன்னணி உறுப்பினர்கள் தெரிவிக்கையில், இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின் பின்னர், புனரமைப்பு வேலைகளையும் மக்களுடனான அரசியல் ரீதியிலான தொடர்புகளையும் மேற்கொள்ள கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

செயலதிபர் தனது கொழும்பு விஜயத்தின் போது, அங்கு தனது பழைய அரசியல் பிரமுகர்களையும் ஏனைய நண்பர்கள் பலரையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தி விட்டு மீண்டும் வடபகுதிக்கு திரும்பியுள்ளார்.



## இவர்கள் நம்புகிறார்கள்...

இலக்குத் தெரியாத
கலங்களே!
இன்னுமா உங்களுக்கு
ஞானம் பிறக்கவில்லை?
உங்கள் பேச்சுக்கள்
புரட்சியை நோக்கித்தான்
ஆனால் கால்களோ?...
கடந்த காலச் சுவடுகளின்
தடம் இன்னும் மாறவில்லை
மீண்டும் தவறுகிறீர்கள்
எம் மக்களின்
வற்றாத கண்ணீரும்
உலராத செந்நீரும்
புரட்சிக்கான
மருத்துவத்தைத்தான்
எதிர்பார்க்கின்றன
அவர்கள் நம்புகிறார்கள்
எங்கள் துவக்குகள்
அம்மணமாக்கப்பட்ட
சகோதரிகளுக்கு
ஆடையை மீட்டுத்தருமாம்
கற்பழிக்கும் கதைகளுக்கு
முற்றுப்புள்ளி வைக்குமாம்
வெட்டி வீழ்த்தும்-
சுட்டுத் தீய்க்கும்-
கொடுமையை நிறுத்துமாம்
ஆனால் நாங்கள்
தாமதிக்கும் விநாடிகளே...?
திசை மாறிய
துவக்குகளே
இனியாவது உங்கள்
குறிகள்
இலவாத அரசுக்கு
எதிராக இருக்கட்டும்
சக போராளிகளுக்கு
எதிராக அல்ல.

அன்று புதிய பாதையில்

www.tamilarangam.net



# நீங்கள் அழிக்கப்படவில்லை விதைக்கப்பட்டுள்ளீர்கள்!

12.11.87 அன்று மாலை, மன்னார் பாண்டியப் புளியங்குளம் பகுதியில் புலிகள் குழுவின் திட்டமிட்டு நடாத்திய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றிற்கு இலக்காகி, குழந்தைகள், பெண்கள் உட்பட கூடவே தமிழீழ மக்கள் விடுதலைக் கழக 11 தோழர்களுடன் மொத்தம் 31 பேர் ஈனத்தனமாக படுகொலை செய்யப்பட்டனர்.

வழமை போல மன்னார் மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சுகவீனமுற்ற பாமர பொது மக்களை செட்டிக் குளம் பொது வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று சிகிச்சையளித்து விட்டு, திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே, மேற்படி புலிகள் குழுவின் போக்கிலித் தாக்குதலுக்கு எதுமறியா அப்பாவிப் பாமர பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

இவர்களுடன், இவர்களுக்காகவே அப்பகுதிகளில் தம்மை அர்ப்பணித்து உழைத்து வந்த மக்கள் தோழர்களான,
பேனாட்-பருத்தித்துறை, சேகர் -நெல்லியடி, கரன் -கிளிநொச்சி, கருணாகரன் -மன்னார், தம்பி -சுளிபுரம், ஜலி -சாவகச்சேரி, யோகன் -மன்னார், ராஜ் -திருமலை, ரமணன் -துணுக்காய், சங்கர் -மன்னார், பிரதீகரன்-கொடிகாமம்
ஆகியோர் மக்கள் துரோகிகளால் புறமுதுகில் குத்தி பலியெடுக்கப்பட்டு விட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட எம் மக்களுக்கும், இறுதிவரை மக்களுக்காகவே உழைத்து, மக்களுடனே மரணித்த தோழர்களுக்கும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது அஞ்சலியினைச் செலுத்துகின்றது.

---

06.11.87, அன்று, முல்லைத்தீவில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட, கழகத் தோழரான சுதா என்ற பாலசந்திரன், பின்னர் முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

06.11,87, அன்று, மன்னார் முருங்கன் பகுதியில், இந்தியப் படையினர் பிரயாணிகள் வண்டி ஒன்றின் மீது, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொழுது, தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வு நிதிய உறுப்பினர் தோழர் ஸ்ரீநாத் கொல்லப்பட்டுள்ளார்.
மேற்படி இரு தோழர்களுக்கும் எமது அஞ்சலியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

---

07.12.87, அன்று, மன்னார் முருங்கன் பகுதியில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சிறிய முகாமொன்றினை, சுற்றி வளைத்து புலிகளின் அராஜகப்படை மேற்கொண்ட தாக்குதலின் போது, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் நிலந்தன், செல்வம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தோழர்களுக்கு எமதஞ்சலியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

# தமிழீழச் செய்திகள்

04.11.87,

புலிகள் குழுவினர் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் வரை, தமிழ்ப் பகுதிகளில் புலிகள் குழுவினருடன் போர் நிறுத்தம் ஒன்றிற்கு இடமில்லையென, தமிழக முதல்வர் போர் நிறுத்தம் ஒன்றினைக் கோரி, இந்திய மத்திய அமைச்சிற்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கையில், பிரதமர் இராஜீவ் காந்தி இவ்வாறு பதிலளித்துள்ளார்.

05.11.87,

ஜயவர்த்தனா புதுடெல்லிக்கு 3 நாள் விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார். கூட்டுப் பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்பு ஒப்பந்தம், என்பன குறித்து, பேச்சுக்கள் மேற்கொள்வதே நோக்கமென அறிவிக்கப்பட்டது.

*)இலங்கையில் இந்திய இராணுவத்தின் நடவடிக்கை குறித்து, இந்தியநாடாளு மன்றத்தில், உடனடி விவாதத்திற்கெடுக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடாளு மன்றத்தில் இருந்து, எதிர்க்கட்சிகளனைத்தும் வெளிநடப்புச் செய்தன.

*)குடாநாட்டில் கடுமையாக நிலவி வரும் உணவுத்தட்டுப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினரும், இந்தியப் படையினரும், படிப்படியாக உணவு விநியோகங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

06.11.87,

இந்தியப் படைகளின் புலிகளுக்கெதிரான தாக்குதலொன்றின் போது, 5 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.

*)முல்லைத்தீவில் கழக உறுப்பினரான தோழர் சுதா என்ற பாலசந்திரன், இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

*)மன்னார் முருங்கன் பகுதியில், பிரயாணிகள் வண்டியொன்றை வழி மறித்து, இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வு நிதியத்தின் உறுப்பினரான 24 வயதுடைய ஸ்ரீகாந் கொல்லப்பட்டுள்ளார்.

*)இலங்கையின் இன்றைய சீரழிவுகளுக்கு மூலகாரணம், தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களே எனவும், இதற்கு முழுப் பொறுப்பும் ஜயவர்த்தனாவே தான் எனவும் திரு: அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

09.11.87,

கொழும்பு மருதானைப் பகுதியில், பாரிய குண்டு ஒன்று வெடித்ததில், 32 ற்குமேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

*)யாழ் குடாநாட்டிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும், புலிகள் குழு மேற்கொள்ளும் கண்ணி வெடித்தாக்குதல்களை கைவிடும் படியும், இதன் மூலம் அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுதல் தவிர்க்கப் பட வேண்டுமென்று உணர்ந்து, அப்பகுதி பொதுமக்கள் இதற்கு எதிராக பல வித எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்க ஆரம்பித்துள்ளனர்..

*)இலங்கை நாட்டில் ஐக்கியத்தையும், தமிழ் மக்களது உரிமைகளையும் பாதுகாக்கவே, தமது படைகள் இலங்கையில் தங்கியிருப்பதாகவும் --

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



--இந்திய இலங்கை அரசுகளின் சமாதான ஒப்பந்தம் சர்வதேச ரீதியில்- ஆதரவு பெற்று விட்டதாகவும், பிரதமர் இரஜீவ் தெரிவித்துள்ளார்.
மேலும் தெரிவிக்கையில், ஒப்பந்தத்தை புலிகள் குழுவினர் குலைக்க முயற்சித்த போதே, அவர்கள் மீதான தாக்குதல்களை தமது படையினர் நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டனரெனவும், ஒப்பந்தம்- கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், 600 றிகுமேற்பட்ட போராளிகள் பொது- மக்களைக் கொலை செய்துள்ளதாகவும், இவர்களினால் ஆயுத அணுகு முறைகளை விட்டு விலகி, ஒரு ஜனநாயக வழியில் நடப்பதற்கு இவர்களால் முடியவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

10.11.87,

ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில், வட, கிழக்கு உட்பட 9 மாகாணங்களுக்கான- சட்ட மூலங்கள் விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டது.
இச்சட்ட மூலங்களை எதிர்த்தும், சமாதான ஒப்பந்தத்தை கண்டித்தும் அரசிற்கெதிரான வன்முறைகள் கொழும்பு- உட்பட தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் சிங்கள தீவிரவாத குழுக்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன

*)தமிழ் நாடு சட்ட சபையில், இலங்கை பிரச்சனை விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட மறுக்கப்பட்டதை அடுத்து, தி.மு.க உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.

11.11.87,

மாகாணசபை அமுலாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான, விவசாய அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயசூரிய இராஜினாமாச் செய்துள்ளார்.

12.11.87,
இலங்கையில் 9 மகாணங்களுக்கான --மாகாண சபை மசோதா, ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் அதிகப்பெரும்பபடியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
138 வாக்குகள் சார்பாகவும், 11 வாக்குகள் எதிராகவும், கணிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின், சிறில் மத்தியு, எதிராகவும், மற்றமிரு- உறுப்பினர்கள் நடுநிலைமையும் வகித்துள்ளனர்.

14.11.87,

ஒரு மாத காலத்திற்கு மேலாக குடாநாட்டில் அமுலில் இருந்த 24 மணிநேர ஊரடங்கு உத்தரவு, காலை- 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரையில் தளர்த்தப்பட்டது.

*)கிழக்கு மாகாண முன்னாள் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர், அப்துள் மஜீத், புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

*)இரு நாட்களாக மட்டக்களப்பு- அடங்கலும் தொடர்ச்சியான 114 மணிநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இந்தியப் படைகளின் தேடுதல்கள் வலுப்பெற ஆரம்பித்தன.
இதனிடையே அன்னையர் முன்னணியினரின் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று, இந்தியப் படைகள் பெண்களுடன் தாகாத முறையில் நடப்பதனைக் கண்டித்து நடாத்தப்பட்டுள்ளது.

*)கடந்த வார கொழும்பு குண்டு வெடிப்பிற்குப் பொறுப்பான, புலிகள் குழுவைச் சேர்ந்த முன்னாள்மல்வத்த கிராம சேவகரான கஜேந்திரன் அம்பாறைப் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் சயனைற் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவருடன் மட்டு. ஊரணியைச் சேர்ந்தவரும் கொழும்பில் பல வருடங்களாக வசித்து வருபவருமான மனோகரி டானியல் என்ற--



--பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

17.11.87,

கையெழுத்துடனிருக்கும் சமாதான உடன் படிக்கையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் தான், இலங்கை மீண்டும் சுபீட்ச நிலையை அடையும் என, ஸ்ரீலங்கா வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, நிதியமைச்சர் றொனி டி- மெல் குறிப்பிட்டுள்ளார்.

*)தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதார அபிவிருத்தி, மற்றும் புனர்வாழ்விற்கென பொருளுதவிகளை வழங்க இரஷ்ய நாட்டு தூதராலயம் இணங்கியுள்ளது.

19.11.87,

புலிகள் குழு கைப்பற்றி தடுத்து வைத்திருந்த 18 இந்திய இராணுவத்தின- ரையும், யாழ் சாவகச்சேரியில் வைத்து, புலிகள் குழுவினரின் ஒரு பகுதியின- ரால் இந்திய இராணுவத்தினரிடம் விடுவிக்கப்பட்டனர்.

*)12/11 அன்று, பாராளுமன்றத்தில் மாகாணசபை மசோதா வாக்கெடுப்பில், நடுநிலமை வகித்த இரு அரசபாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். எதிராக வாக்களித்த சிறில் மத்தியு ஏற்கனவே கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளார்.

21.11.87,

புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கு முகமாக, காலை 7 மணி முதல் 48 மணி நேர போர் நிறுத்தமொன்றை ஒருதலைப்பட்சமாக இந்தியப் படைகள் அறிவித்தன.

23.11.87,
காலை 7 மணியுடன் இந்தியப்படைகளின் போர் நிறுத்தம் முடிவடைந்தபோ- தியும், தமிழ்ப் பகுதிகளெதியும், புலிகள் குழுவினர் எதுவித ஆயுதங்க- ளையும் ஒப்படைக்கவில்லை.
இதற்கிடையில் புலிகள் குழு விதித்த இரு புதிய நிபந்தனைகள் தொடர்பாக பதிலளிக்கையில், ஆயுதங்களை ஒப்படைக்காதவரை புலிகள் குழுவினருடன் எதுவித பேச்சிற்கும் இடமில்லையென, இந்திய மத்திய அமைச்சு தெரிவித்தது.

*)புலிகள் குழுவினர் அமைதிவழிக்கு திரும்ப விரும்பாத நிலையில், இந்தியப்படைகளின் தேடுதல்களும் முற்றுகைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டன.

*)தம்மைப் பற்றி தகவல் கொடுக்கும் எந்தவொரு பொது மகனுக்கும், மிக்கம்ப மரணதண்டனை பகிரங்கமாக வழங்கப்படுமென யாழ் பகுதிகளில் புலிகள் குழு சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

24.11.87,

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தை மிக விரைவில் அமுல்படுத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்தாசைகளையும், உதவிகளையும் அனைவரும் வழங்க வேண்டுமென, ஸ்ரீலங்கா கம்யூனிச கட்சி, - இந்திய மார்க்சிய கட்சி, மற்றும், இந்திய கம்யூனிச கட்சி என்பன இணைந்து விடுத்திருக்கும் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

*)பி.பி.சி உலகச் சேவையின் 24 மணி நிகழ்ச்சியில், பி.பி.சிக்கான இலங்கை நிருபர் ஜோன் றெட்டி- தெரிவிக்கையில், புலிகள் குழுவின் - போக்கு அரசியல் தன்மையற்றுச் செல்கிறதெனவும், பிரச்சனைகளை அரசியல் ரீதியில் அணுகும் தன்மைகள் இன்னமும் இவர்களிற்கில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.
*)கொழும்பு -யாழ் இடையே அனுமதி பெற்ற வாகனங்களின் போ

www.tamilarangam.net



--க்கு வரத்துகள், ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், யாழ் நகரிற்கும் வவுனியாவிற்கு மிடையே 36 தடைமுகாம்களாலும்; அதில் இடம் பெறும் கடும்-சோதனைகளினாலும் மக்கள் பெரும்-சிரமமடைகின்றனர்.

*) காட்டிக் கொடுப்பவர்க்கு முன்னெச்சரிக்கை என முத்திரை குத்தப்பட்டு 3 தமிழர்கள் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட பின்பு, யாழ்ப்பாணத்தில் மின்கம்பத்தில் கட்டப்பட்டுள்ளனர்.

26.11.87,

பெண்கள் தாதிகள் பயிற்சி விவகார-அமைச்சர் திருமதி. சுனேத்திரா ருபசிங்க தலைமையில் மருத்துவக் குழுவொன்று சந்தித்து, யாழ் பொது வைத்திய சாலை சம்பவங்கள், மற்றும் சுகாதார நிலைமைகள் குறித்து பேசியுள்ளனர் இதன் போது, யாழ் பொது வைத்திய சாலையில் வைத்து இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட டாக்டர்கள், சிவகுமார், ஜெகாபசுபதி ஆகியோரும் உடனிருந்தனர். இதன் போது நடைபெற்ற விசாரணையில், இந்தியப்படைகளால் பல டாக்டர்கள் கொல்லப்பட்டு, பல தாதிமார் கற்பழிக்கப்பட்டதாக புலிகளால் கூறப்பட்ட சம்பவங்கள் உண்மைக்குப் புறம்பானதெனவும் தெளிவு படுத்தப்பட்டது.

*) ஆயுதங்களை ஒப்படைத்து, ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு-போராளிகளுக்கும், பூரண பாதுகாப்பும், மன்னிப்பும் வழங்கப்படுவதோடு, அவர்களுக்கான கல்வி, வேலை வாய்ப்புக் திட்டங்களில் ஈடுபடுத்துவதோடு,-மாதாந்த வருவாயையும் தேடிக்கொடுப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

27.11.87,

திருமலை குச்சவெளி உதவி அரசாங்க-அதிபர் சின்னத்துரை, அப்பகுதி கிராம--சேவகர் அனிபா, மற்றும் 3 முஸ்லிம் பொது மக்களை புலிகள் குழுவினர் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

*) வட/கிழக்கிற்கு மேலும் இருபுதிய இந்தியப்படைப்பிரிவுகள் வந்து சேர்ந்துள்ளனர். இவர்களுடன் மொத்தம்-சுமார் 40,000 இந்தியப்படைகள் வட/கிழக்கில் தங்கியுள்ளனர்.

28.11.87,

இந்தியப் படையினரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் விநியோகிக்கும் உணவுகளை பொது மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென எச்சரித்து, புலிகள் குழுவால் யாழ் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
யாழ் சாவகச்சேரியில், இந்தியப்படைகளின் உணவினைப் பெற, கியூ வரிசையில் காத்து நின்ற பொது-மக்கள் மீது, புலிகள் கிரனைற் வீசித் தாக்கியதில் 8 பொது மக்கள்கொல்லப்பட்டனர்.

29.11.87,

தமிழ்நாடு முழுவதிலும், புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை இந்திரா-காங்கிரஸ் கட்சியுடன் மற்றும் சில-கட்சிகளுமிணைந்து மேற் கொண்டுவருகின்றனர். சமாதான உடன்பாட்டை-உலக நாடுகளனைத்தும் ஏற்றுக்கொண்டிருக்கும் இதே வேளை, புலிகள்குழு மட்டும் எதிர்ப்புக் காட்டுவதோடு-முரட்டு வாதங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக-குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் தமிழ்நாட்டில் நடாத்தப்பட்டுள்ளது.

30.11.87,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது, சமாதான ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்க்கவில்லையெனவும், ஒரு சில சரத்துகளை மட்டுமே எதிர்ப்பதாகவும், புதிய நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர்.

# இந்தியப் படையினர் அகதிகளைத் தாக்கினர்

15/11/87 சிந்தாமணி.

## "புளொட்" இயக்கம் கண்டனம்

கொழும்பு நவ. 14

இந்தியப் படையினர் அகதிகளைத் தாக்குவதாகவும். பெண்களை கடத்திச் செல்வதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான செயல்களினால் பிற்போக்குவாதிகளே நன்மையடைவார்கள்.

தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்(புளொட்) இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறதென்று மேற்படி இயக்கத்தினால் விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்திய படைகளின் செயல்களினால் பொதுமக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர், பெருந்தொகையான மக்கள் இந்தச் செயல்களினால் அகதிகளாகியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களை எமது இயக்கம் கடந்த மாதத்திற்குள் இருமுறை கண்டித்துள்ளது.

இந்தியப் படையினர் புளொட் இயக்கத்திற்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த எமது இயக்க உறுப்பினரான தோழர் ஸ்ரீகாந்தாவை அவர்கள் கொன்றனர்.

புலிகள் இயக்கத்திற்கு எதிரான இந்தியப் படைகளின் நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இன்று வவுனியா மாவட்டத்திற்கும் பரவியுள்ளது.

இதனால் 7500 முஸ்லிம்கள் அகதிகளாக தில்லையடி புத்தளம். மற்றும் மதுரங்குழி ஆகிய இடங்களில் தங்கியிருக்கின்றனர்.

வீடுகளை விட்டு வெளியேறும் அகதிகளையும் இந்தியப் படையினர் தாக்கி வருவதாக குற்றம் காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இரண்டு முஸ்லிம் யுவதிகளை இந்தியப் படையினர் கடத்திச் சென்றதாக தில்லையடியில் உள்ள அகதிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான செயல்களால் பிற்போக்குச் சக்திகளே பயன் அடைவர், வடக்கு கிழக்கு பகுதியில் ஜனநாயகத்தை ஏற்படுத்த இந்தச் சம்பவங்கள் தடையாக அமையும்.

இலங்கையின் ஐக்கியத்தையும், நிலத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கான சமாதானத்தையும் அது பாதிக்கும்.

# 4 பேர் உயிருடன் கம்பத்தில்!

செட்டிகுளம் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நான்கு இளைஞர்கள் திங்களன்று காலை செட்டிகுளத்தில் உயிருடன் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார்கள்.

மேற்படி நான்கு இளைஞர்களும் பல கொள்ளைகளை நடத்தியதாகவும், 'புளொட்' இயக்கத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இரண்டு உள்ளூர் தயாரிப்பான துவக்குகளுடனும் இவர்கள் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வீரகேசரி. 13.11.87.

# கொள்ளைப் பொருட்களை புளொட் மீட்டது

இது இவ்விதமிருக்க கடந்த மாதம் குசைப்பிள்ளையார் குளப்பகுதியிலுள்ள ஹோட்டல் உரிமையாளரொருவரின் வீட்டில் கொள்ளையிடப்பட்ட பொருட்களை புளொட் இயக்கம் மீட்டுள்ளது.

கொள்ளையரில் ஒருவர் கைது செய்யப்பட்டு உயிருடன் மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டார். கொள்ளையிடப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான தங்க நகைகள் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

வீரகேசரி. 17.11.87.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த வருடத்தின் அதிசிறந்த 'ஜோக்'குகள்

## இலண்டன் தொலைக் காட்சி

கேள்வி:-தொலைக்காட்சி அறிவிப்பாளர்.
பதில்:-யாமா சார்.



கேள்வி: நீங்கள் சிங்கள மக்கள் யாரையும் கொலை செய்யவில்லையா?
பதில்: இல்லை.

கேள்வி: நீங்கள் சக இயக்கப் போராளிகள் யாரையும் கொலை செய்யவில்லையா?
பதில்: இல்லை, இல்லை,

கேள்வி: நீங்கள் பொது மக்கள் யாரையும் கூட, திருட்டு கொலை கொள்ளைகளுக்காக கொலை செய்யவில்லையா?
பதில்: இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

பார்வையாளர்கள்: கொக்கிளாய், நாயாறு, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, கோண்டாவிலில் எல்லாம் மக்கள் எப்படி இறந்தார்கள்?.

யாமா சார்: ஓ அதுவா! நாங்கள் அவர்களைக் கொலை செய்யவில்லை.. எம்மவர்கள் முயல் சுடும் போது, எம்மவர்களுக்கு தெரியாமல், சாதுரியமாக எம்மவர்களின் துப்பாக்கி முனைகளுக்கு முன்னால் வந்து, தமது உயிரைப் போக்கிக் கொண்டனர்.

## இது புலிகளின் ரேல்



'எம்மவர்கள் முல்லைத்தீவு -முள்ளியவளையில், இந்தியப் படைகளுக்கெதிராக மூர்க்கத்தனமாக மோதிய போது, பல இந்தியப் படைகள் கொல்லப்பட்டதோடு, இறந்த இந்தியப் படைகளின் உடல்களையும் விட்டு விட்டு, மிகுதிப் படை தலை தெறிக்க ஓடி மறைந்தது.

பின்னர் இறந்த இந்தியப் படைகளின் உடல்களை எம்மவர்கள் அருகில் சென்று பார்த்த போது, அங்கு ஒரு 'புளொட்' உறுப்பினர் இந்தியப் படை சீருடையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

எம்மவர்கள் அவ் உடலை, புகைப்படமெடுக்கவோ அல்லது தூக்கி வரவோ இன்றி, விட்டு விட்டு வந்து விட்டனர்.

PUBLISHED BY T.I.B , BM BOX 1916 ,LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்